Crl.Misc/39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register

**Case No. STC.200/2025**

Deposition of **PW-7 LW-8**

| Name | : | அமுதராணி | Husband Name | : | செல்வநாதன் |
|---|---|---|---|---|---|
| Village | : | அண்ணாநகர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | ஆய்வாளர் (ஓய்வு) | Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் கடந்த 13.06.2024ம் தேதி வலங்கைமான் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த போது கும்பகோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சித்தன்வாழூர் சித்ரா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று மனு எண்.334/2024 என மனு ரசீது கொடுத்தேன். விசாரணைக்கு பின்பு 22.06.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண்.303/2024, ச/பி.294(b),323, 355இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன், ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தேன். **ஆகியவை முறையே அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவயிட சாட்சிகளாக சாட்சி சித்ரா, வரதராஜன், மனோகரன், பழனிவேல் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய தேடிய போது எதிரியானவர் முன் ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரண்டர் ஆகி பிணையில் சென்று விட்டார். பின்னர் 05.09.2024ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 சித்ரா என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் வித்யபாரதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1க்கு ஏற்பட்ட சாதரான காயம் என்று காயச்சான்று பெற்றுள்ளேன். அன்றைய தினமே எனது விசாரணையை முடித்து 05.09.2024ம் தேதி எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

சம்பவயிடமானது வயல் மற்றும் வீட்டு வாசல் என்று இரண்டு இடங்களாக பார்வை மகசரில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதிவு செய்யப்பட்டது குறித்து சரியான காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மனு விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவ சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றாலும் மாதாந்திர பட்டியல் கணக்கிற்காக பொய்யாக வாக்குமூலம் பெற்றதாக கூறி இவ்வழக்கினை பதிவு செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:42:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.